
ARAN International e-Journal of Tamil Research

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
(Peer Reviewed Journal Multidisciplinary)
ISSN: 2582-399X



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

Vol:8 Issue :30 April 2026
கோட்டை:8 வாயில்:30 ஏப்ரல் 2026

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

Founder / Editor in Chief

**Dr PRIYAKRISHNAN**

Publisher

**MR P. JAYAKRISHNAN**

Editorial Board Members

**Dr V SELVAKUMAR**

Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India
selvakumar.v@tamiluniversity.ac.in

**Dr. S. KAVITHA**

School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

**Dr.K.DAYANIDHI**

Assistant Professor & Head i/c , Department of Vaishnavism ,
University of Madras, TamilNadu, India. dayanidhi@unom.ac.in

**Dr O.MUTHIAH**

Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University)
Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

**DR UMADEVI**

Professor In Tamil, Department of Modern Indian Languages And
Literery Studies University of Delhi,Delhi . dumadevi@mil.du.ac.in

Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

அரண்
பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
Aran
International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

**DR JAGADEESAN.T.**

Assistant Professor of Tamil, Department of Indian Languages,
Faculty of Arts, Banaras Hindu University,
Varanasi- 221005, Uttar Pradesh,India.

**DR SENTHIL PRAKASH.S**

Teacher – in- charge/Assistant professor (SG),Department of
Tamil, Institute of Languages, Literature& culture,
Visva – Bharathi University,Santiniketan,West
Bengal, India -731235

**DR R TAMILSELVAN**

Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

**Dr SWARNAVEL ESWARAN**

Associate Professor Departments of English, and Media and Information
Michigan State University. USA. eswaran@msu.edu

**Dr (Ms.) NILANKA LIYANAGE**

Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts,
Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,Eastern University Srilanka

**Mrs THULSIVANTHANA UDAYASHANKAR**

Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of
Aesthetic Stidies ,Eastern University, Srilanka

அரண்
Aran
பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

**Dr B. DHANANJAYAN**
Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet, Chennai - 600 021.

**Dr P.SEKAR**
Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.sekar@iasetamilnadu.ac.in

நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்
இதழாக்கம்
திரு ப. ஜெயகிருஷ்ணன்
முதன்மை ஆசிரியர்
முனைவர் பிரியாகிருஷ்ணன்
+917299587879
www.aranejournal.com
aranjournal@gmail.com

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# புணர்ச்சியின் பொதுக் கட்டமைப்பு

## THE GENERAL STRUCTURE OF TAMIL MORPHOPHONEMICS

***K. Vennila,*** *Reg. No. BDU2320632780368 Research Scholar, Department of Tamil, Maruthupandiyar college, Thanjavur — 613403*

***Dr. M. Boopathi,*** *Research Supervisor, Department of Tamil, Maruthupandiyar college, Thanjavur — 613403 (Aiffilated to Bharathidasan University, Tiruchirappalli)*

**திருமதி க வெண்ணிலா**, *முனைவர் பட்ட ஆய்வாளர்* ***Reg. No. BDU2320632780368*** *தமிழ் உயராய்வுத் துறை, மருதுபாண்டியர் கல்லூரி, தஞ்சாவூர்-* ***613403*** *(பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது)*

**முனைவர் ம. பூபதி,** *உதவிப்பேராசிரியர் - ஆய்வு நெறியாளர், தமிழ் உயராய்வுத் துறை, மருதுபாண்டியர் கல்லூரி, தஞ்சாவூர்-* ***613403*** *(பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது)*

***Abstract***

*Among the Tamil grammatical books, the Tolkappiyam is considered to be the most ancient and distinguished by antiquity and greatness. The author of this book is Tolkappiyar. Tolkappiyar has recorded his views on* ***Punarchi*** *(euphonic combination) in the Ezhuthathikaram. In Tamil grammatical texts, the role of the grammar of* ***Punarchi*** *is indispensable. Tolkappiyam — Ezhuththadhikaram, Nannul, Veerasozhiyam, Neminatham, Muthuveeriyam, Ilakkana Vilakkam, Swaminatham, and Thonnul Vilakkam these eight books explain the grammar of* ***Punarchi*** *. Based on how letters are arranged in a language, grammar is explained in the language system. Tholkappiyar did not explain the method by which letters combine to form language (words). Therefore, this research summary examines what kind of relationship Tholkappiyar considered to exist between letters and words.*

**Key Words:** *Dravidan linguistics, Punarchi, general structure, Nedungkanakku, Nilaimozh*

**ஆய்வுச்சுருக்கம்**

தமிழ் இலக்கண நூல்களில் தொல்காப்பியம் காலத்தால் முற்பட்டுப் பழமையும் பெருமையும் வாய்ந்ததாகக் காணப்படுகிறது. இந்நூலை இயற்றியவர் தொல்காப்பியர். தொல்காப்பியார் எழுத்ததிகாரத்தில் புணர்ச்சி குறித்த கருத்துக்களைப் பதிவு செய்துள்ளார். தமிழ் இலக்கண நூல்களில் புணர்ச்சி இலக்கணத்தின் பங்கு இன்றியமையாதது. தொல்காப்பியம் - எழுத்ததிகாரம், நன்னூல், வீரசோழியம், நேமிநாதம், முத்துவீரியம், இலக்கணவிளக்கம், சுவாமிநாதம், தொன்னூல் விளக்கம் என்ற எட்டு நூல்கள் புணர்ச்சி இலக்கணம் பற்றிக் கூறுகின்றன. மொழியில் எழுத்துக்கள் எவ்வாறு அமைகின்றன என்ற அடிப்படையில் மொழிமரபில் இலக்கணம் கூறுப்படுகிறது. எழுத்துக்கள் எவ்வாறு

சேர்ந்து மொழி (சொல்) ஆகின்றன என்ற முறையில் தொல்காப்பியர் கூறவில்லை ஆகவே எழுத்துக்கும் சொல்லுக்கும் எவ்வகை உறவு இருப்பதாகத் தொல்காப்பியர் கொண்டார் என்பது குறித்து இக்கட்டுரை ஆராய்கின்றது.

**திறவுச் சொற்கள்:** புணர்ச்சி, பொதுக்கட்டமைப்பு, நெடுங்கணக்கு, நிலைமொழி, வருமொழி

**ஆய்வின் நோக்கமும் அணுகுமுறையும்**

தமிழ் இலக்கணத்தில் எழுத்துக்கள் சேர்வது புணர்ச்சி என்று பொதுவாகக் கூறலாம் எனினும் அது புணர்ச்சியின் முழுப் பொருளையும் விளக்குவதாக அமையாது. இந்நிலையில் எழுத்துநிலை, சொல்நிலை என்ற இருவகை நிலையில் புணர்ச்சி குறித்துக் கூறுவது ஆய்வின் நோக்கமாகும். தொல்காப்பியர், பவணந்திமுனிவர் ஆகியோரின் புணரியல் குறித்த கருத்துக்களை ஒப்பாய்வு செய்வதால் ஒப்பீட்டுமுறை ஆய்வு இவ்வாய்வில் மேற்கொள்ளப்படுகின்றது. மேலும் புணரியல் கோட்பாடுகள். அது தொடர்பான விளக்கங்கள் குறித்து ஆய்வு மேற்கொள்கையில் பகுப்பாய்வுமுறை, விளக்கமுறை முதலான திறனாய்வு முறைகளும் பயன்படுத்தப் பெறுகின்றன.

**முன்னுரை**

எழுத்து, சொல், தொடர் என்னும் பாகுபாட்டுடன் மொழி என்பது கட்டமைக்கப்பட்டுள்ளது. தமிழ்மொழி ஒரு கட்டமைப்புள்ள மொழியாகும். தமிழ் எழுத்துக்களின் வரிசை முறையாகிய தமிழ் நெடுங்கணக்கு முறையில் உடற்கூற்றியலும் உளவியலும் பொதிந்துள்ளன. எழுத்திலக்கியம் பெற்றுள்ள எல்லா மொழிகளிலும் ஓர் ஒழுங்கு காணப்படுகின்றது. ஓர் எழுத்தோ ஒன்றிற்கு மேற்பட்ட எழுத்துக்களோ தொடர்ந்து நின்று பொருள் தரின் அது சொல் எனப்படும். ஓர் எழுத்தையோ ஒரு சொல்லையோ தனித்துக் கூறும்பொழுது அதனால் பயன் யாதுமில்லை. சொற்கள் தொடர்ந்து நின்று பொருள் தரும் தொடரமைப்பே பயன் தரும்.

தொடரமைப்பில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட சொற்கள் காணப்படுகின்றன. தொடரமைப்பில் ஒரு சொல்லுக்கு மற்றொரு சொல் இயைபுடையதாக இருக்கின்றது. இந்த இயைபினைப் பல நிலைகளில் இலக்கணங்கள் வரையறைக் கூறியுள்ளனர். இதன் பொதுக் கட்டமைப்பினை இவ்வியல் விளக்குகின்றது.

**புணர்ச்சி**

தமிழ் இலக்கணத்தின் உயிர் போன்ற பகுதி புணரியல். புணரியல் என்பது நுணுக்கமான ஒன்று. தமிழ்மொழியில் கிடைத்த முதல் இலக்கண நூலாகியத் தொல்காப்பியத்தில் தொல்காப்பியர் புணர்ச்சி இலக்கணத்தை ஆறு இயல்களாகப் பகுத்துள்ளார்.

அவை 'மயங்கியல்' என முடியும் இரண்டு இயல்களும், 'இயல்' என முடியும் மூன்று இயல்களும், 'மரபு' என முடியும் ஓர் இயலும் ஆகும். **1.** புணரியல், **2.** தொகை மரபு, **3.** உருபியல், **4.** உயிர் மயங்கியல், **5.** புள்ளி மயங்கியல், **6.** குற்றியலுகரப் புணரியல்.

தொல்காப்பியத்திற்குப் பின் வந்த நன்னூல் புணரியலைப் பற்றி மூன்று இயல்களில் குறிப்பிடுகின்றது. அவை **1.** உயிரீற்றுப் புணரியல், **2.** மெய்யீற்றுப் புணரியல், **3.** உருபுப் புணரியல் என்பனவாகும். தொல்காப்பியமும் நன்னூலும் புணர்ச்சிக்கெனத் தனி இயல்களைக் கொண்டுள்ளன. வீரசோழியமும் நேமிநாதமும் புணர்ச்சியை எழுத்தியலின் ஒரு உட்பகுதியாக்கித் தனி இயல் அமைக்காமல் எடுத்துரைக்கின்றன. நன்னூல் இலக்கண விளக்கம் ஆகிய இரண்டும் மூன்று இயல்களில் புணர்ச்சியை விளக்கியுள்ளன. தொன்னூல் விளக்கம், முத்துவீரியம், சுவாமிநாதம் ஆகிய மூன்றும் ஒரு இயலில் புணர்ச்சியைக் கூறியுள்ளன.

**தொடர்**

தொடரில் ஒரு சொல்லுக்கும் அதனை அடுத்து வரும் சொல்லுக்கும் தொடர்பு உண்டு. முதலில் இருக்கும் சொல் நிலைமொழி எனப்படும். அதனை அடுத்து நிற்கும் சொல் வருமொழி எனப்படும். நிலைமொழிக்கும் வருமொழிக்கும் இடையில் உள்ள இலக்கியப் பொருள், இலக்கணப் பொருண்மை இவற்றைப் பொருத்து அவ்விரு மொழிகளுக்கும் இடையே சேர்க்கை நடைபெறும். இந்தச் சேர்க்கையே 'புணர்ச்சி' எனப்படுகிறது.

***"ஒரு பதத்தினையும் இன்னொரு பதத்தினையும் பொருள் பொருத்தமுறச் சேர்ப்பது புணர்ப்பு ஆகும். இப்படிச் சேர்க்கும்போது ஏற்படும் சந்தி மாற்றங்கள் எல்லாம் கூறும் பகுதியினைப் 'புணரியல்' என்பர். புணரியல் என்பதனைப் புணர்ப்பு என்றும் கூறுவர்"[1]*** என பொற்கோ தன் நூலில் குறிப்பிட்டுள்ளார். (**பொற்கோ**, **இலக்கணக் கலைக்களஞ்சியம்**, ப.115.)

புணர்ப்பு, புணர்ச்சி என்பன ஒரு பொருள் பல சொற்கள். தொல்காப்பியர் புணர்ச்சியினை '***புணர்நிலைச் சுட்டு"[2]***, (**தொல்காப்பியம்**, **எழுத்ததிகாரம்**, **நூ.**108, **112.**) '***மொழி புணர் இயல்பு'[3]***, (**மேலது.**, **நூ.**109.) '***புணர்ச்சி'[4]*** (**மேலது.**, **நூ.**143.)

என்னும் சொற்களால் குறிப்பிடுகின்றார். பவணந்தி முனிவர் புணர்ச்சியினைப் '***புணர்ப்பு'[5]*** (**நன்னூல்**, **எழுத்ததிகாரம்**, **நூ.**57,) 151. என்னும் சொல்லால் மொழிகின்றார்.

**நிலைமொழி வருமொழி**

புணர்ச்சி என்பது இரண்டு பொருள்களின் சேர்க்கை என்று பொருள்படும். இலக்கணத்தைப் பொருத்தவரையில் இரண்டு எழுத்துக்களின் சேர்க்கையைக் குறிக்கிறது. அந்த இரண்டு எழுத்தும் நிலைமொழி ஈற்றெழுத்தும் வருமொழி முதலெழுத்துமாகிய இரண்டின் சேர்க்கையைக் குறிக்கிறதே தவிர ஒரு சொல்லுக்குள் வரும் இரண்டு எழுத்துக்களின் சேர்க்கையைக் குறிப்பிடவில்லை. இதனைத் தொல்காப்பியர் புணரியல் என்ற பகுதியில் புணர்தலின் இயல்பு பற்றிக் குறிப்பிடுகின்றபொழுது மிகத் தெளிவாகப் பதிவு செய்துள்ளார்.

**புணரியல் என்பதன் விளக்கம்**

புணரியல் என்றால் பொதுவாக மொழிகள் புணர்தலைச் சுட்டும். இப்புணரியல் என்ற சொல்லிற்குப் பல இலக்கண உரையாசிரியர்களும் மொழியியலறிஞர்களும் பலவாறு விளக்கம் தந்துள்ளனர்.

உரையாசிரியராகிய இளம்பூரணர் புணரியல் என்பது "மொழிமரபில் கூறப்படும் மூவகை மொழிகளும் தம்முட் புணருமாற்றை எடுத்துரைப்பது" என்று விளக்கம் தந்துள்ளார். நச்சினார்க்கினியர் புணரியலைப் பற்றி விளக்கம் தருகின்றபொழுது "மொழிமரபிற் கூறிய மொழிகளைப் பொதுவகையாற் புணர்க்கும் முறைமை உணர்த்தினமையின் புணரியல் என்று பெயர் பெற்றது" (தொல்.எழுத்து.நச்சர்.103) என்று குறிப்பிட்டுள்ளார்.

க.வெள்ளைவாரணர் புணரியல் என்பதற்கு விளக்கம் கூறுகின்றபொழுது,

***"மொழிகள் புணர்தற்குரிய கருவியின் இயல்புணர்த்தினமையின் இது புணரியலென்னும் பெயர்த்தாயிற்று"*** [6] என்று புணரியலுக்கு விளக்கம் தந்துள்ளார். (**க.வெள்ளைவாரணர், தொல்காப்பியம் நன்னூல், நூ.**124) ஆ.சிவலிங்கனார் புணர்ச்சியைப் பற்றிக் கூறுகின்றபொழுது,

> ***"நிலைமொழி வருமொழிகளின் இடையில் வரும் சாரியை, உருபுகளின் இயல்பு கூறுதலினாலும், புணர்மொழிகளின் பொது இலக்கணம் கூறுதலினாலும் புணரியல் எனப்பட்டது"*** [7] என்று புணரியலுக்கு விளக்கம் அளித்துள்ளார். (**ஆ.சிவலிங்கனார், தொல்காப்பியம் எழுத்ததிகாரம் புணரியல், நூ.**3)

புணரியல் இரண்டு வகைப்படும். அவை,**1.**பொதுப் புணரியல் **2.**சிறப்புப் புணரியல் என்பதாகும். மொழியியல் அறிஞரான க.ப.அறவாணன் தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ள புணரியலைப்

> ***"பொதுப் புணரியல்" என்றும் மற்றைய தொகை மரபு, உருபியல், உயிர் மயங்கியல், புள்ளி மயங்கியல், குற்றியலுகரப் புணரியல் ஆகிய ஐந்து இயல்களில் கூறப்படும் கருத்துக்களைச் சிறப்புப் புணரியல் என்றும்"*** [8] குறிப்பிட்டுக் காட்டியுள்ளார். (**க.ப.அறவாணன், தொல்காப்பியக் களஞ்சியம், ப.**9.)

மேலும் மற்றொரு மொழியலறிஞரான செ.வை.சண்முகம்,

> ***"பொதுவாக எழுத்து மாற்றங்களையும் ஒரு சொல்லுக்குரிய எழுத்து வேறுபாடுகளையும் விளக்குவேத புணரியல்"*** [9] என்று புணர்ச்சியைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். (**செ.வை.சண்முகம், எழுத்திலக்கணக் கோட்பாடு, ப.**203.)

தொல்காப்பியர் புணர்தலில் இயல்பு குறித்து கூறுகின்றபொழுது,

*அவற்றுள் நிறுத்த சொல்லின் ஈறாகெழுத்தொடு*

*குறித்து வருகிளவி முதலெழுத்தியைய* (தொல்.எழுத்து.109)

என்ற நூற்பாவில், மேற்கூறும் புணர்ச்சி வகையான் நான்கா மென்பதூஉம், அவை, சொல் வகையான் நான்காமென்பதூஉம் புணர்வது சொல்லும் சொல்லுமேயன்றி, எழுத்தும் எழுத்துமென்பதூஉம் உணர்த்துதல் நுதலிற்று என்றுரைக்கின்றார்.

நிலைமொழி வருமொழி யெனப்பட்டவற்றுள், நிறுத்த சொல்லினது ஈறாகின்ற எழுத்தினோடு அதனைக் குறித்து வருகின்ற சொல்லினது முதலெழுத்துப் பொருந்த, பெயர்ச் சொல்லோடு பெயர்ச் சொல்லைப் புணர்க்கும் காலத்தும், பெயர்ச் சொல்லோடு வினைச் சொல்லைப் புணர்க்கும் காலத்தும், வினைச் சொல்லோடு பெயர்ச் சொல்லைப் புணர்க்கும் காலத்தும், வினைச் சொல்லோடு வினைச் சொல்லை புணர்க்கும் காலத்தும் திரியும் இடம் மூன்றும் இயல்பு ஒன்றும் ஆகிய அந்நான்கே மொழிகள் தம்மிற் புணரும் இயல்பு என்று கூறியுள்ளார். புணர்ச்சி குறித்து தொல்காப்பியர் பதிவு செய்துள்ள இச்செய்தியானது அவருடைய மொழிப் புலமை, மொழி ஆளுமை, மொழியியலறிவு ஆகியவற்றிற்குச் சான்றாகத் திகழ்கின்றது. மொழியைப் பற்றி அறிந்து கொள்ள இயலாதிருந்த பல ஆண்டுகளுக்கு முன்பு தொல்காப்பியர் இத்தகைய அரிய தகவல்களை ஆவணப்படுத்தியிருப்பது போற்றுதற்குரிய செயலாகும்.

தொல்காப்பியத்திற்கு அடுத்து நன்னூல் "மெய்யையும் உயிரையும் முதலும் ஈறுமான உடைய பகாபதம் பகுபதம் என்னும் இரண்டு பதங்களும் தன்னொடு தானும் பிரிதொடு பிரிதுமாய் அல்வழிப் பொருளினாதல் வேற்றுமைப் பொருளினாதல் பொருந்துமிடத்து நிலைமொழியும் வருமொழியும் இயல்போடும் விகாரத்தோடும் பொருந்துவது புணர்ச்சி" என்று குறிப்பிட்டுள்ளது. இக்கருத்தினை "மெய்யுயிர் முதலீறாமிகு பதங்களும்" (நன்.151) என்ற நூற்பா உணர்த்துகின்றது.

புணர்ச்சிப் பற்றிக் கூறவந்த தொல்காப்பியர் "புணர்வது எழுத்தும் எழுத்துமே" என்று தெளிவாகக் கூறியுள்ளார். ஆனால் நன்னூல் "இருபதங்கள் . . . இயைவது புணர்ப்பே" என்று எடுத்துரைத்துள்ளது. பொதுவாகக் கூறினால் "புணர்ச்சி என்பது நிலைமொழியின் ஈறும் வருமொழியின் முதலும் புணர்கின்ற நிலையைத் தான் சுட்டும்."

மொழி நூலாரான க.சாம்பசிவனார், புணர்ச்சியை இரண்டு வகையாகப் பகுத்துள்ளார். அவை, ***அகப்புணர்ச்சி (Internal Sandhi), புறப்புணர்ச்சி (External Sandhi)"***[10] **(க.சாம்பசிவனார், தொல்காப்பியம் எழுத்ததிகாரம், நூ.49.)**

**அகப்புணர்ச்சி**

ஒரு கட்டுருபும் ***(Bound Marph)*** ஒரு தனி உருபும் ***(Free form)*** புணர்வது 'அகப்புணர்ச்சி' ஆகும். அ **+** நூல் , அ **+** ந் **+** நூல் → அந்நூல் 'அ' என்பது கட்டுருபு நூல் என்பது தனி உருபு

**புறப்புணர்ச்சி**

இரண்டு தனி உருபுகள் **(free form)** மட்டும் புணர்வது 'புறப்புணர்ச்சி' ஆகும்.

மரம் + கிளை → மரக்கிளை. இதில் மரம், கிளை என்ற இரண்டு சொற்களும் தனித்தனி உருபுகளாகும். மொழியியலறிஞர் பொன்.கோதண்டராமன், ***"புணர்ச்சி இலக்கணத்தைச் சந்தி இலக்கணம் என்றும் உருபொலியனியல் (Morphophonemics)"***[11] என்றும் கூறியுள்ளார். பொன்.கோதண்டராமன், **(இலக்கண உலகில் புதிய பார்வை**, ப.57)

மொழியியலறிஞரான ஹாக்கெட், ***"புணர்ச்சிக்கு வடிவங்களாகத் தேர்ந்தெடுக்கப்படுபவை தனித்து இயங்கும் கட்டில்லா வடிவம் (Free form) ஆக இருக்க வேண்டும் என்றும் கூறியுள்ளார். மேலும் சொல்லின் மாற்று வடிவங்கள் இரண்டு என்றும் எடுத்துரைத்துள்ளார்."***[12]

*(C.F.Hocket, A Course in Mordern Linguistics, p.282)*

சொல்லின் மாற்று வடிவங்கள் இரண்டு. அவை,ஒலி கட்டுப்பாடுடைய மாற்றுருபு, சொல் கட்டுப்பாடுடைய மாற்றுருபு என்பனவாகும். இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும், "எழுத்திலக்கணத்தை தொல்காப்பியர் (கருவி, செய்கை) என்ற இரு வகையால் உணர்த்துகிறார்" என்று விளக்கம் தந்துள்ளனர். அவை கருவி, செய்கை என்பனவாகும்.

கருவி என்பது சொல் புணர்ச்சிக்குரிய அமைப்பாகும். இக்கருவி நான்கு வகைப்படும். புறப்புறக் கருவி, புறக்கருவி, அகப்புறக் கருவி, அகக்கருவி

"சொற்களுக்குக் கருவியாகும் எழுத்துக்களைப் பற்றிக் கூறும் நூல் மரபும் பிறப்பியலும் புறப்புறக் கருவி என்றும்" (தொல்.எழுத்து.நச்சர்.**16**) "புணர்ச்சியைக் கூறாது அதனைப் பெறும் சொற்களின் இயல்புகளைக் கூறும் மொழிமரபு புறக்கருவி என்றும்" (தொல்.எழுத்து.நச்சர்.**16**) "நிலைமொழியீறும் வருமொழி முதலும் புணர்ச்சியில் அடையும் பொதுவான நிலைமைகளைக் கூறும் புணரியல் அகப்புறக் கருவி என்றும்" (தொல்.எழுத்து.நச்சர்.**16**) "புணர்ச்சிக்குக் கருவியால் நிலைமொழி ஈறு பற்றிய இலக்கணம் கூறும் நூற்பாக்களை அகக்கருவி என்றும்" (தொல்.எழுத்து.நச்சர்.**15**) கருவியின் வகைகளுக்கு நச்சினார்க்கினியர் நன்கு விளக்கம் அளித்துள்ளார்.

**செய்கை**

நச்சினார்க்கினியர் "செய்கை" என்பது புணர்ச்சியைக் குறிக்கும் என்று கூறியுள்ளார். இச்செய்கையும் நான்கு வகைப்படும். அவை,புறப்புறச் செய்கை, புறச் செய்கை, அகப்புறச் செய்கை, அகச்செய்கை "புணர்ச்சியின்கண் நிலைமொழியீறும் வருமொழி முதலும் திரியாதும் கெடாதும் நின்று உடம்படு மெய்யை இடையில் பெறுவது புறப்புறச் செய்கை என்றும்" இதனை விளக்கும் பொருட்டு நச்சினார்க்கினியர், *எல்லா மொழிக்கும் உயிர்வரு வழியே உடம்படு மெய்யின்*

*உருபுகொளல் வரையார்* (தொல்.எழுத்து.140)

என்றார் போல்வன வரும் நூற்பாக்களில் எடுத்துக் காட்டியுள்ளார்.

"புணர்ச்சிக்கண் வருமொழி முதல் அடையும் மாற்றம் (நிலைமை) புறச்செய்கை என்றும்" இதனை விளக்க நச்சினார்க்கினியர்,

*லள என வரூஉம் புள்ளி முன்னர்*

*தந வரின் றன வாகும்மே* (தொல்.எழுத்து.146) என்றார் போல்வரும் நூற்பாக்கள் எடுத்துக்காட்டியுள்ளார். "நிலைமொழி ஈறு சாரியைப் பெற்றுப் புணர்வது அகப்புறச் செய்கை என்றும்" இதனை விளக்க நச்சினார்க்கினியர்,

*உகரமொடு புணரும் புள்ளி யிறுதி*

*யகரமும் உயிரும் வருவழி இயற்கை* (தொல்.எழுத்து.163)

என்றார் போல்வரும் நூற்பாக்களில் சுட்டிக் காட்டியுள்ளார்.

*நிலைமொழி ஈறு புணரும் முறைமை*

*அகச்செய்கை* என்றும் (தொல்.எழுத்து.நச்சர்.16) செய்கையின் வகைகளுக்கு விளக்கமளித்துள்ளார்.

நன்னூலும் எழுத்திலக்கணத்தைக் கருவி, செய்கை என்று இரண்டாகப் பிரித்துள்ளது. இவற்றில், "கருவி என்பது சொற்கள் ஒன்றோடு ஒன்று புணரும் போது கருவியாக வரும் இலக்கணத்தைக் குறிக்கிறது என்றும்" (நன்.264)

"செய்கை என்பது புணர்ச்சி விதிகளைச் சுட்டுவது என்றும்" (நன்.264) நன்னூல் உரை எடுத்தியம்புகின்றது.

**புணர்ச்சியின் இன்றியமையாமை**

புணர்ச்சிக்கு இரண்டு சொற்கள் தேவை. அவற்றுள் ஒன்று நிலைமொழி மற்றொன்று வருமொழி. நிலைமொழியையும் வருமொழியையும் சேர்த்து உச்சரித்தால் ஒரு பொருள் நிலையும் பிரித்து விட்டிசைத்தால் வேறொரு பொருள் நிலையும் தரும். எனவே சொல்வோன் மனக்குறிப்பினைப் பொறுத்து வேறுபடும் பொருள்களை அறியமுடிகின்றது.

"செம்பொன்பதின்றொடி" என்னும் சொல்லினை இருவேறு பொருள் தரும் நிலையில் பிரித்து உச்சரிக்கலாம். செப்பு — ஒன்பதின்தொடி, செம்பொன் — பதின்றொடி இவ்விரண்டு மொழிகளையும் சேர்த்து எழுதினால் வருவது "செம்பொன்பதின்றொடி" என்னும் ஒரே அமைப்பு ஆகும். ஆனால் முதல் தொடரில் விட்டிசைத்தபடி "செம்பினால் செய்யப்பட்ட ஒன்பது வளையல்"

என்னும் பொருள் விளக்கப்படுகிறது. இரண்டாம் தொடரில் விட்டிசைத்தபடி "தூய பொன்னால் செய்யப்பட்ட பத்து வளையல்" என்னும் பொருள் விளக்கப்படுகிறது.

***தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்***

***பெய்யென பெய்யும் மழை*** [13] **(பரிமேலழகர் உரை, திருக்குறள், குறள்.55)**

இத்திருக்குறளில் வரும் *3, 4* சீர்கள் பெரும்பாலான திருக்குறள் நூல்களில் "கொழுநன் தொழுதெழுவாள்" என்றே பதிப்பிக்கப் பெற்றுள்ளன. "கொழுநன் தொழுதெழுவாள்" என்பது நிலைமொழியும் வருமொழியும் இருந்தால் இஃது அல்வழித் தொடர் புணர்ச்சியாகும். இதற்குப் பொருள் கணவன் மனைவியின் கால்களில் விழுந்து வணங்கிய பிறகு மனைவி எழுந்திருப்பாள் என்பது பொருளாக அமையும். திருவள்ளுவர் இப்பொருளில் குறிப்பிடவில்லை. எனவே "கொழுநன் தொழுதெழுவாள்" என்னும் இயல்புப் புணர்ச்சி தவறானதாகும்.

மேற்குறித்த புணர்மொழிகள் "கொழுநற் தொழுதெழுவாள்" என இருப்பதே சரியானதாகும். இவ்வாறு இருந்தால் இது வேற்றுமைப் புணர்ச்சி எனப்படும். இத்தொடர் இரண்டாம் வேற்றுமைத் தொகையாகும். இதற்குப் பொருள் "கொழுநனைத் தொழுதெழுவாள்" என்பதாகும்.

"கெழுநன் **+** தொழுதெழுவாள்" என்னும் சொற்கள் புணர்ச்சியின் நிலையினைப் பொருத்துப் பொருள் வேறுபடுவதனை மேற்குறித்த விளக்கம் புலப்படுத்துகின்றது. மேற்குறித்த புணர்ச்சிக்குரிய சான்றுகளும் விளக்கங்களும் புணர்ச்சியின் இன்றியமையாமையை வெளிப்படுத்துகின்றன. இப்பொருள் வேறுபாடு சொல்வோன் குறிப்பினைப் பொருத்து அமைகின்றது.

***"தெளிவான கருத்துப் பரிமாற்றமும் பண்பான உணர்வு வெளிப்பாடும் மொழியின் இரண்டு அடிப்படை நோக்கங்கள். இந்த நோக்கங்களை ஆகக் கூடிய அளவில் நிறைவேற்றும் ஆற்றலை மொழிக்கு வழங்குவதே இலக்கணத்தின் முதன்மைப் பணியாகும். தமிழ் இலக்கணத்தில் இன்றியமையாத பகுதி அதன் சொற்புணர்ச்சி இலக்கணம் சொற்களை எளிதாக ஒலிக்கவும், பொருள் தெளிவாக வெளிப்படவும் சொற்புணர்ச்சி இலக்கணம் தமிழில் தவிர்க்கவியலாத இலக்கணக் கூறாகும்"*** [14] என்று செ.சீனி நைனா முகம்மது தமது நூலில் குறிப்பிட்டுள்ளார். செ.சீனி நைனா முகம்மது, **(புதிய தமிழ்ப் புணர்ச்சி விதிகள், ப.5)**

புணர்ச்சியின் இன்றியமையாமையை உணர்த்த தொல்காப்பியர் எழுத்ததிகாரத்தில் மூன்றில் இரண்டு மடங்கு புணர்ச்சியலக்கணத்தை எடுத்துரைப்பது இங்கு நோக்கத்தக்கதாகும். நன்னூல் எழுத்ததிகாரத்திலும் ஐந்து இயல்களில் மூன்று இயல்கள் புணர்ச்சிக் குறித்து பதிவு செய்துள்ளன.

***"புணர்ச்சி இலக்கணம் பெரிய இடத்தைப் பெற்றுள்ளது. புணர்ச்சி, இலக்கணம் பற்றி ஆய்வுகளும் செய்யப்பட்டுள்ளன. இவற்றில் உள்ள புணர்ச்சி விதிகள் எண்ணிக்கையால் மிகுதியாகவே உள்ளன. இருப்பினும் அவை கூறும் விதிகளை எவ்வளவு முயன்று பயின்றாலும் புணர்ச்சி இலக்கணத்தில் திட்டவட்டமான தெளிவு ஏற்படுவதில்லை. அவற்றில் தோன்றும்***

***ஐயங்களுக்கும் வினாகளுக்கும் விடையோ விளக்கமோ எளிதில் கிடைப்பதில்லை"[15]*** என்று செ.சீனி நைனா முகம்மது மொழிவதும் புணர்ச்சி இலக்கணத்தின் இன்றியமையாமையை உணர்த்துகின்றது. **(மேலது.,** *ப.8.)*

**தமிழிலக்கணங்களிற் புணரியல் அமைதி**

தமிழ்மொழி ஓர் ஒட்டுநிலை மொழியாகும். சொல்லின் முன்பும் பின்பும் எழுத்துக்கள் சேர்ந்து அந்தச் சொல்லின் இலக்கணப் பொருண்மையை மாற்றி அமைக்கின்றன. படி → ஏவல் வினை,

படி + த் + தல் = படித்தல் → தொழிற்பெயர், படி + கிறு + ஆன்=படிக்கின்றான்→ வினைமுற்று

படி + த் + த் + அ + வ் + அன் = படித்தவன் → வினையாலணையும் பெயர்

படிக்கிலன் → எதிர்மறை வினைமுற்று, இவ்வாறு ஒரு சொல்லுக்குள்ளேயே நிகழும் புணர்ச்சிக்கு 'அகப்புணர்ச்சி' என்று பெயர்.

அடிசில் + அயின்றான் → அடிசில் அயின்றான்

பலா + பழம் → பலாப்பழம்

மண் + குடம் → மட்குடம்

மரம் + வேர் → மரவேர்

இவ்வாறு இரண்டு சொற்கள் புணரும் நிலைக்குப் 'புறப்புணர்ச்சி' என்று பெயர்.

யான் + கோடு → யானை கோடு என வந்தால் "யானையும் கோடும்" என உம்மைத் தொகையாகும். யானை + கோடு → யானைக்கோடு என ஒற்று மிகுந்து வந்தால் "யானையினது கோடு" என்னும் உடைமைப் பொருள் தரும் ஆறாம் வேற்றுமைத் தொகையாகும்.

> ***"மலர்க்கணைத் தொடுத்தான்" என விகாரம் உண்டென வழியில் "மலராகிய கணையைத் தொடுத்தான்" என்று பொருள் கொள்ளும். "மலர்க்கணை தொடுத்தான்" என இயல்பாக வந்த வழியில் மலரையும் கணையையும் தொடுத்தான் என்று பொருள் கொள்ளும். இவ்வாறு விகாரத்தினால் பொருள் வேறுபடுதலைக் காண்க"[16]***

என்று ஜி.யு.போப் குறிப்பிட்டுள்ளது மிக பொருத்தமாக உள்ளது. ஜி.யு.போப்,

**(தமிழ் இலக்கண நூல்,** *ப.47)*

புணர்ச்சியினை உவமையின் மூலம் தெ.பொ.மீனாட்சி சுந்தரன் தெளிவாகக் கூறியுள்ளார்.

***"நிலைமொழியின் இறுதி எழுத்தும் வருமொழியின் முதலெழுத்தும் இரண்டு நூலின் முனைகள் இணைவதைப் போன்றது. இரண்டு விரல்களின் நுனிகள் சேர்ந்தது போன்றது அன்று. நிலைமொழியின் இறுதியும் வருமொழியின் முதலும் மட்டுமே புணர்ச்சி என்னும் செயலில் பங்கு கொள்கின்றன. விரல்கள் அடியிலிருந்து நுனிவரை சேர்ந்துள்ளது போல இரு சொற்களின் முழுப் பகுதிகளும் புணர்ச்சியில் பங்கு பெறுதல் இல்லை."[17]***

புணர்ச்சியின் இன்றியமையாத கூறினை விளக்குவனவாக இவ்வுவமைகள் விளங்குகின்றன. ***(T.P.Meenakshisundaran, Foreign Models in Tamil Grammar, p.125)***

**முடிவுரை**

தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ள புணர்ச்சி இலக்கணத்தில் சொற்கள் புணரும் புணர்ச்சி நிலையானது எழுத்து வகையில் நான்கு (உயிரோடு உயிர், உயிரோடு மெய், மெய்யோடு உயிர், மெய்யோடுமெய்) என்றும், சொல் வகையால் நான்கு (பெயரொடு பெயர், பெயரொடு வினை, வினையொடு பெயர், வினையொடு வினை) என்றும் இவ்வாய்வில் கண்டறியப்பட்டுள்ளது. புணர்ச்சி இலக்கணம் பற்றிபிற இலக்கண நூல்கள் குறிப்பிட்டுள்ள கருத்துக்களும் எடுத்துரைக்கப்படுள்ளன.

**துணைநூற்பட்டியல்**

1. அறவாணன், க.ப., - தொல்காப்பியக் களஞ்சியம், பாரி நிலையம், சென்னை, பதிப்பு 1975.

2. கோதண்டராமன், பொன் - இலக்கண உலகில் புதிய பார்வை தமிழ் நூலகம், சென்னை, பதிப்பு 1973.

3. சண்முகம், செ.வை. - எழுத்திலக்கணக் கோட்பாடு அனைத்திந்திய தமிழ் மொழியியற் கழகம் அண்ணாமலை நகர் பதிப்பு 1980.

4. சாம்பசிவனார், சி. - தொல்காப்பியம் - எழுத்ததிகாரம் (கருத்துக்கோவை) வளவன் வெளியீடு, சென்னை பதிப்பு 1982.

5. சிவலிங்கனார், ஆ., - தொல்காப்பியம் - எழுத்ததிகாரம் புணரியல் உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை பதிப்பு 1982.

6.சீனிநைனா முகம்மது, செ - புதிய தமிழ்ப் புணர்ச்சி விதிகள் அடையாளம் பதிப்பகம், திருச்சி பதிப்பு 2013.

7.திருக்குறள் - பரிமேலழகர் உரை பழனியபபா பிரதர்ஸ், சென்னை

நான்காம் பதிப்பு 1994.

8. தொல்காப்பியம் - எழுத்ததிகாரம் (இளம்பூரணர் உரை), சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, ஆகஸ்ட் 1995.

9. நன்னூல் - எழுத்ததிகாரம் - சங்கர நமச்சிவாயருரை டாக்டர் உ.வே.சாமிநாதையர் நூல் நிலையம் , சென்னை ஐந்தாம் பதிப்பு 1991.

10. பொற்கோ - இலக்கணக் கலைக் களஞ்சியம்,பூம்பொழில் வெளியீடு, சென்னை.

மூன்றாம் பதிப்பு 2000

11. போப். ஜி.யு,- தமிழ் இலக்கண நூல் அமெரிக்கன் பிரஸ், சென்னை 1857.

12. வெள்ளைவாரணர், க., - தொல்காப்பியம் நன்னூல் எழுத்ததிகாரம்

அண்ணாமலைப் பல்கலைக்கழகம் அண்ணாமலை நகர், பதிப்பு 1962.

*References*

*Aravanan. K.P - Tholkappiya Kalanjiyam, Paari Niaiyam, Chennai.\ Edition* — 1975

*Kothandaraman. Pon - Elakkana Ulagil Puthiya Paarvai, Tamil Noolagam,Chennai. Edition -* 1973

*Charles F. Hockett - A Course in Modern Linguistics, The Macmillan Company,*

*New York. Edition -* 1958

*Shanmugham.S.V - Ezhuthilakkana Kotpaadu, All India Tamil Linguistics Association,*

*Annamalai Nagar.Edtion -*1980

*Sambasivanar - Tholkappiyam Ezhuthathigaram (Karuthu Kovai)Valavan Veliyeedu, Chennai.*

*Edition -* 1982

*Seeninaina Muhamadhu.S. - Puthiya Tamil Punarchivithigal Adaiyalam Pathippagam,*

*Trichy. Edition -* 2013

*Thirukkural Parimelazhagar Urai* - *Palaniyappa Brothers, Chennai. 4th Editon* - 1994

*Tholkappiyam* - *Ezhuthathigaram Elampooranar Urai Saiva Sidhantha Noorpathipuk Kazhagam, Chennai. August* - 1995

*Meenakshisundaran* *Foregin Models in Tamil Grammer, Dravidian Linguistics Association. Trivandram.*

*Edition* - 1974

*Nannool* - *Ezhuthathigaram Shangara Namasivayar Urai*

*Dr.U.V.Swaminatha Iyar Nool Nilaiyam.Chennai. 5th Edition* - 1991

*Porko* - *Elakkana Kalai Kalanjiyam, Poompozhil Veliyeedu, Chennai.*

*3rd Edition* - 2000

*Pope.G.U* - *Tamil Elakkana Nool, American Press Chennai. Edition* - 1957

*Vellaivaranar. K* - *Tholkappiyam Nannool Ezhuththigaram,Annamalai University, Annamalai Nagar.Edition* - 1962

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
ARAN International e-Journal of Tamil Research

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.
வரும் 2026, ஜூலை மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள் - ஜூலை 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் ஜூலை இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com